DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CMP.No. 2081/2022

Miscellaneous :

Sessions : statement of complainant

Deposition of Witness for

| | |
|---|---|
| Name | புவனேஷ்வரி |
| Father / Husband Name | தண்டபாணி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **20.09.2025**

**பிரமாண வாக்குமூலம்**

நான் தற்போது சின்ன கயப்பாக்கத்தில் வசித்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். கடந்த 15.01.2022 ம் தேதி மாலை 3.00 முதல் 3.30 மணிக்குள் என் கணவர் தண்டபாணி எனது வீட்டிற்கு பெயிண்ட் அடிப்பதற்காக எங்களுக்கு சொந்தமான டிவிஎஸ் 50 இருசக்கர வாகனத்தில் என் கணவர் அச்சிறுபாக்கம் நகருக்கு சென்று வீடு திரும்பும் போது அச்சிறுபாக்கம் ஆர்ச் எதிரே சாலையை கடக்க நின்று கொண்டிருந்த போது விழுப்புரத்தில் இருந்து சென்னை நோக்கி சென்ற அரசு பேருந்து என் கணவர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக அங்கு இருந்தவர்கள் எனக்கு நான் வீட்டில் இருந்தபோது எனக்கு தகவல் சொன்னார்கள். அங்கிருந்த பொது மக்களில் சிலர் என் கணவரை மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி மருத்துவமனையில் அனுமதித்தார்கள். நான் மேற்படி மருத்துவமனையில் அன்று இரவு சென்று பார்த்தபோது என் கணவருக்கு கால் உடைந்து உடல் முழுவதும் அடிப்பட்டு சுய நினைவு இல்லாமல் இருந்தார். பின்னர் மேல் சிகிச்சைக்காக குரோம்பேட்டையில் உள்ள சரவணகுமார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மேற்படி மருத்துவமனையில் 18 ம் தேதி போலிசார் வந்து விசாரணை செய்தார்கள். மேற்படி மருத்துவமனையில் எனது கணவர் சுமார் 17 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். தற்போது எனது கணவர் நடக்கமுடியாத நிலையில் தற்போது சிகிச்சை எடுத்துக்கொண்டு எங்கள் வீட்டில் உள்ளார். இது சம்மந்தமாக விபத்து நடந்த அன்று அச்சிறுபாக்கம் காவல் நிலைத்தில் புகார் கொடுத்தேன்.